## தேசிய இளைஞர் படையணி – 2015

---

தேசிய இளைஞர் படையணியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் படையணியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் படையணியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி படையணியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 நிறுவனத்தை நிறுவுதல் மற்றும் அதனது செயற்பாடுகள்**

இளைஞர் படையணி 2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணிச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டிருந்தது. 2002 ஆண்டில் இருந்து 2014 ஆண்டு வரை அனைத்துச் செலவுகளும் அப்போதைய வரிசை அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. சட்டத்தின் பிரகாரம் இளைஞர் படையணி என்றால் எந்த வகையைச் சேர்ந்த நிறுவனம் என அறுதியாகக் குறிப்பிடப்படாமை மற்றும் ஏனைய சிக்கல்கள் தொடர்பாக 2011 ஜனவரி 18 ஆம் திகதி சமர்ப்பித்திருந்த அமைச்சரவை பத்திரத்தின் மூலம் உத்தேசித்துள்ளவாறு படையணிச் சட்டத்தை திருத்தி அமைப்பதற்கு மற்றும் படையணியினை சட்ட ஆளுமை ஒன்றுடனான நிறுவனம் ஒன்றென கவனம் செலுத்தி நிருவாக மற்றும் நிதிசார் அதிகாரங்கள் படையணியின் பணிப்பாளருக்கு சாட்டுவதற்காக 2011 பெப்ரவரி 10 திகதி அங்கீகாரத்தை பெற்றிருந்த போதிலும் அதன் பிரகாரம் சட்டம் திருத்தியிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது தேசிய இளைஞர் படையணியின் முதலாவது கணக்குத் தொகுதி என 2015 ஆண்டிற்கான இறுதி நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் படையணியின் கணக்குகளின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சாட்டப்பட்டுள்ளது. மேலும், படையணியினால் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கான ஆரம்ப மீதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு இறுதி வரையான காலப்பகுதியை பிரயோகித்திருந்தது.

**1.5 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய இளைஞர் படையணியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(அ) நியமத்தின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் உரிய தகைமையுடைய பெறுமதி மதிப்பீட்டு தொழிலில் அங்கத்தவர் ஒருவரினால் குறிப்பிட்ட சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும் 2015 ஆண்டின் போது படையணியின் சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது படையணியில் கடமையுரியும் பதவியணியினரின் மூலம் குறிப்பிட்ட சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்திருந்தது.

(ஆ) நியமத்தின் 69 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்றிற்கான பெறுமானத்தேய்வு கணித்தல் ஆரம்பிக்கப்படுவது அதனை பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவந்த பின்னர் எனினும், படையணி சொத்துக்களை பெறுமானத்தேய்வு கணிப்பதற்காக அதற்கு முரணான கொள்கையொன்றினை தெரிவு செய்திருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மோட்டார் வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 712,054 தொகை மற்றும் கட்டிட அபிவிருத்தி வேலை எனக் கணிக்க முடியாதிருந்த ரூபா 1,139,962 தொகையான செலவுகளை மூலதனப்படுத்தியிருந்தது.

(ஆ) 2014 ஆண்டின் போது 'பௌருஷாபிமானி' நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக ரூபா 662,500 தொகை, முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 350,786 தொகை மற்றும் நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக் கொள்வனவு செய்தல் ரூபா 837,753 தொகை என்பன நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் எனக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஏனைய தாபனச் செலவுகள் என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,851,039 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கடந்த ஆண்டில் 'பௌருஷாபிமானி' நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கலை விழாவுக்காக மேற்கொள்ளப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 6,337,732 தொகை கடந்த ஆண்டிற்கான இலாபத்துடன் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித் திட்டச் செலவுகள் எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஜூன் 21 ஆம் திகதி மானியம் ஒன்றாகக் கிடைத்திருந்த ரூபா 11,468,480 தொகை பெறுமதியான IBPO Training Kit இருப்பு ஒன்றினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது அழிக்கப்பட்டிருந்த ரூபா 432,255 பெறுமதியான கலைந்து செல்லும் போது பயன்படுத்தும் சீருடைகள் மற்றும் ரூபா 740,800 பெறுமதியான பிரயாண மெத்தை தொக்கு ஒன்று முறையே வருடாந்த சீருடைச் செலவில் மற்றும் தளபாடங்களும் அலுவலக உபகரணங்கள் பராமரிப்புச் செலவில் அடக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணிச் சட்டத்தின் பிரிவு 2(4) | இளைஞர் படையணி சபையின் விடயங்களை நிருவகிப்பதற்காக தேவைப்படக் கூடிய தொழிற்பயிற்சி, இளைஞர் அபிவிருத்தி மற்றும் நிறுவுதல் ஆகிய விடயங்களுக்காக மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை : நிதிப் பிரமாணம் 571(3) | உரிய விபரங்கள் கிடைக்கும் வரை வைப்புக் கணக்கொன்றில் தொங்கல் நிலையில் வைக்கப்பட்டுள்ள பணம் காலங்கடந்த வைப்புக்கள் என கணிப்பதற்காக இடமளிக்காமல் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான விதமான குறிப்பிட்ட கணக்கிற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்காக அல்லது கூடிய விரைவில் திருப்பி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் அவ்வாறு செயற்படாமல் 2013 ஆண்டிற்கான கூட்டுத்தொகை ரூபா 159,334 இற்கான தடுத்து வைத்தல் பணம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான படையணியின் திறைசேரி மீண்டுவரும் மானியம் ரூபா 512,793,466 தொகை உட்பட மொத்த வருமானம் ரூபா 553,015,706 தொகையாகக் காணப்பட்டதுடன் மொத்தச் செலவுகள் ரூபா 563,585,367 தொகையாகக் காணப்பட்டமையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 10,569,661 இற்கான பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நடைமுறை விகிதசாரம் 5.63:1 நிலையில் காணப்பட்ட போதிலும், திடீர் விகிதாசாரம் 0.66:1 தொகையாக இருந்தது நடைமுறை சொத்துக்களில் இருப்பு 88 சதவீதம் பிரதி நிதித்துவப்படுவது இதற்கான காரணியாகியுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் படையணியின் குறிக்கோள்களாவன இளைஞர் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி என்பனவாகும். அந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் முதலாவது மற்றும் இரண்டாவது குழு என 35 மத்திய நிலையங்களுக்காக சேர்க்கப்பட்டிருந்த 7697 மாணவர்களில் 4936 மாணவர்கள் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்த போதிலும், தேசிய தொழில்சார் தகைமைகள் சான்றிதலுக்கான தொழிற்திறன் பரீட்சைக்கு 4629 மாணவர்கள் மாத்திரமே தோற்றியிருந்தனர். இதில் 4385 மாணவர்களே பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர். இவர்களில் 1842 மாணவர்களுக்காக சான்றிதழ்கள் கிடைத்திருக்காததுடன், சான்றிதழ் வழங்கப்படும் வெளி நிறுவனத்தின் தாமதமே இதற்குக் காரணமாகியிருந்தது.

(ஆ) சேர்க்கப்பட்டிருந்த மாணவர்களில் 2471 பேர் பாடநெறிகளை விட்டு சென்றிருந்தனர்.

(இ) பாடநெறியினை விட்டுச் செல்லாவிடினும் பாடநெறியினை பூர்த்தி செய்யாத மாணவர்களின் எண்ணிக்கை 290 ஆகக் காணப்பட்டதுடன் பாடநெறியினை பூர்த்தி செய்த போதிலும் மதிப்பாய்வு பரீட்சைக்குப் தோற்றியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 307 ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டின் போது வெளி தொழிற்பயிற்சி நிறுவனமொன்றிற்கு ரூபா 23,980,610 இற்கான கொடுப்பனவு ஒன்று செய்யப்பட்டு தேசிய தொழில்சார் தகைமை சான்றிதழ் (NVQ 3/4) பெறுவதற்காக 2796 மாணவர்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அவர்களில் 1710 மாணவர்கள் மாத்திரமே பயிற்சியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்தார்கள். இந்த எண்ணிக்கை படையணிக்கு சேர்க்கப்பட்ட மாணவர்களில் 22 சதவீதம் ஆகிய குறைந்த விகிதாசாரமாகவே இருந்தது.

## 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 67 ஆவது சுதந்திர தின ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக 2015 ஆண்டின் போது இளைஞர் படையணியினால் ரூபா 6,403,951 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்ததுடன் இந்த செலவு நிறுவனத்தின் குறிக்கோள்களுடன் நேரொத்தவை அல்லாத செலவு ஒன்றென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ஹோட்டல் பாடநெறி கட்டணம் என ரூபா 810,812 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், இவ்வாறு பாடநெறிகளுக்காக கட்டணம் அறவீடு செய்வதற்கு சபையின் அங்கீகாரம் பெற்றதற்கான அல்லது பாடநெறி கட்டணத்தை தீர்மானித்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) இளைஞர் படையணிக்கு புறம்பான சிறு தொழில்கள் அபிவிருத்தித் துறைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ஒன்றான ரூபா 1,886,281 தொகை 2015 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் படையணியின் செலவுகள் என காட்டப்பட்டிருந்தது.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் 5(4) (உ) உப பிரிவின் பிரகாரம் பணிக்கொடை கொடுப்பனவு குறிப்பிட்ட தினத்தில் இருந்து 12 மாதங்களை விட கூடிய காலத்திற்காக நிலுவையாகக் காணப்பட்ட சந்தர்ப்பங்களில் பணிக்கொடையாக அறவிடப்பட வேண்டிய தொகையில் முப்பது சதவீதம் மிகைவிதிப்பு ஒன்றினை செலுத்தப்பட வேண்டும். படையணியின் திறமையின்மையின் காரணமாக 10 ஊழியர்களுக்காக இவ்வாறு 30 சதவீத மிகைவிதிப்பாக ரூபா 206,459 தொகை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. மேலும், இந்த மிகை விதிப்புத் தொகை பணிக்கொடைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததெனவும் அவதானிக்கப்பட்டது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காத போதிலும் படையணியினால் நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாகனங்கள் என உட்படுத்தியிருந்த பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,000,000 இற்கான 02 மோட்டார் வாகனங்களை மீளாய்வாண்டு பூராகவும் பயன்படுத்தியிருக்காதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியாகிய 2017 மே 30 திகதி வரை அதில் ஒரு மோட்டார் வாகனம் நிறுவன வளவில் பாதுகாப்பற்ற நிலையில் உக்கக் கூடிய நிலையில் காணப்பட்டதெனவும், அடுத்த மோட்டார் வாகனம் இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**4.5 முறைசார் விதமாக உரித்தாக்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சர்வோதயாவிற்கு சொந்தமான காணி ஒன்றில் 4,630,000 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடமொன்றில் காணப்பட்ட தனமல்வில இளைஞர் படையணி மத்திய நிலையம் 2013 ஜூலை 15 திகதி மூடப்பட்டிருந்தது. கட்டித்தை பயன்படுத்தும் போது ஏற்பட்டிருந்த நட்டங்களாகிய ரூபா 1,049,223 தொகை மற்றும் பெறுமானத்தேய்வு கழித்த பின்னர் கட்டிடத்தின் தேறிய பெறுமதி ரூபா 1,449,047 தொகையினை குறிப்பிட்ட உடன்படிக்கையின் பிரகாரம் முப்பது நாட்களுக்குள் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆண்டின் போது 3 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்டிருந்தாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இனங்கண்டிருந்த தேசிய இளைஞர் படையணிக்கு பயன்படுத்தப்படும் கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமை படையணிக்கு இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அவ்வாறு சட்டரீதியான உரிமையொன்று காணப்படாத போதிலும் தலைமை அலுவலகம் மற்றும் மத்திய நிலையங்கள் நடத்தப்பட்டு வரும் ஏனைய கட்டிடங்களுடனான காணிகளின் நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 30,058,546 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**4.6 பதவியணியினர் நிருவாகம்**

---

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 676 தொகையாகக் காணப்பட்டதுடன் அவை 319 நிரந்தர பதவியணியினரை மற்றும் 357 ஒப்பந்த அடிப்படை பதவியணியினரைக் கொண்டிருந்தது. நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியில் 17 உம் மற்றும் ஒப்பந்த அடிப்படை பதவியணியில் 109 உம் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.7 வாகனப் பாவணை**

---

நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த, வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூபா 27,401,000 தொகை பெறுமதியான 8 வாகனங்கள் நிறுவனத்தின் மோட்டார் வாகனங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

---

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2015 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 23 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் அல்லாத 05 சொத்து விடயங்களின் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான எண்ணிக்கையிடையே 64 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் படையணியின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுக் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பிரதான பேரேடு பேணப்பட்டிருக்காமை மற்றும் கணக்குகளை இணக்கஞ் செய்தல் போதியளவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொருட்பதிவேட்டு கட்டுப்பாடு | ஆவணங்கள் பேணப்படுவதில் பலவீனங்கள் காணப்படல் மற்றும் கணக்கீடு செய்யப்படாத இருப்புக்கள் காணப்படல். |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | மூலதனச் செலவு விடயங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே முரண்கள் காணப்படல். |
| (ஈ) | தகவல்கள் முறைமை பேணப்படல் | அறிமுகப்படுத்தியிருந்த தகவல் முறைமை நாளது வரை பேணப்பட்ட தகவல் இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ள முடியாமை. |